ரஷ்ய உடனுழைப்புடன் புதிய தொழில்கள்

* 289 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ரஷ்ய உதவியுடன் கூடிய தனியார் தொழில் நிறுவனங்கள் தமிழகத்தில் எங்கெங்கு துவங்கப்படவிருக்கின்றன?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

Jurisdiction of Munsiff Courts

* 290 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Industries be pleased to state whether there is any proposal under the consideration of the Government to increase the jurisdiction of District Munsiff Courts from Rs. 5,000 to Rs. 10,000 ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இப்பொழுது ரூ. 5,000 பெகூனியரி ஜூரிஸ்டிக்ஷன் முன்சிப்களுக்கு என்று இருக்கிறது. இது மிகக் குறைவாக இருக்கிறது. ஆதலால் இன்று இருக்கிற நாணய மதிப்பின் அடிப்படையில் முன்பு நிர்ணயிக்கப்பட்ட அதிகார வரம்பை புனர் பரிசிலனை செய்வதற்கு அரசாங்கம் ஹைகோர்ட்டுக்கு ஏதாவது ஆலோசனை கொடுத்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஹைகோர்ட்டு அரியர்ஸ் கமிட்டி இப்படிப்பட்ட ஒரு சிபார்சை மத்திய அரசுக்கு தெரிவித்திருக்கிறது. மத்திய அரசு மாநிலங்களின் அறிக்கையைக் கேட்டிருக்கிறது. நம்முடைய அரசின் சார்பிலே இதை ஆதரிக்கிறோம் என்று கூறியிருக்கிறோம்.

Cement lining for irrigation canals

* 291 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether there are proposals under the consideration of the Government for lining the irrigation canals with cement; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (இ) அமராவதி கால்வாயில் இரண்டு பகுதிகளின் (reaches) காரைப்பூச்சு செய்வதற்கு மதிப்பீடுகள் அரசினரால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு காரை பூசுவதற்கான ஆரம்பவேலைகள் ஏற்கனவே தொடங்கப்பட்டு இப்பணியானது